மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: திரு.ப. ரமேஷ், பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள், புதன்கிழமை

I.A. No. 138/2026 in O.S. No.24/2024

காயத்ரி ---- மனுதாரர்/வாதி

எதிர்

1. அன்பரசன்
2. பரிமளா
3. சிவப்பிரகாசம்
4. பிரகாஷ்
5. தமிழ்செல்வி
6. சுகுமார்
7. அமர்சிங்
8. நிர்வாக அதிகாரி,
ஸ்ரீகைலாசநாதஸ்சுவாமி கோவில்,
மெயின்ரோடு, திங்களூர் &போஸ்ட்
திருவையாறு தாலுக்கா -- எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

<u>வழக்கறிஞர் முன்னிலை:</u>

| | | |
|---|---|---|
| மனுதாரர் /வாதிக்காக | : | திருமதி.M.S.ரபேல்ராஜ் |
| எதிர் மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்காக | : | திரு.M.முருகையன் |

**<u>உத்தரவு</u>**

1) தாவா நிலத்திலுள்ள நெற்பயிர்களை அறுவடை செய்து நிகர கண்டுமுதலை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வழக்கறிஞர் ஆணையர்



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.11 17:40:31 +0530

நியமனம் செய்யக்கோரி உரிமையியல் விசாரணைமுறை சட்டம் கட்டளை 26 விதி 9-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பப்பட்டுள்ளது.

2) **<u>மனுவின் சுருக்கம்</u>**

2.1) இம்மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். தாவா சொத்து நஞ்சை நிலம் 8-ம் எதிர்மனுதாரருக்கு பூரண சொந்தமானது ஆகும். மனுதாரர் தாவா நிலங்களை குத்தகைக்கு சாகுபடி செய்து வருகிறார். மனுதாரரின் (காயத்ரி) பெயர் சட்டம் 10/69-ன் படி குத்தகைதாரராக பதிவு செய்து உத்தரவாகியுள்ளது. அந்த உத்தரவை எதிர்த்து 8-ம் எதிர்மனுதாரர் தஞ்சாவூர் வருவாய் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த தள்ளுபடி உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

2.2) 8-ம் எதிர்மனுதரார் ஆதரவு தருவதால் 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் சட்ட விரோதமாக தாவா சொத்துக்களை ஆக்கிரமித்து சாகுபடி செய்து பலன்களை அனுபவித்து வருவதால் ரிசிவர் நியமனம் செய்ய கோரி தனியாக மனு தாக்கல் செய்து அந்த மனு இ.ம.எண்.69/2024 என நிலுவையில் உள்ளது. இந்நிலையில் எதிர்மனுதாரர் தாவா நிலங்களில் பயிர் செய்துள்ள நெற்பயிர்களை விரைவில் அறுவடை செய்ய ஏற்பாடு செய்து வருகிறார் என்பதால் அந்த சட்டவிரோத செயலை நீதிமன்றம் அனுமதிக்க கூடாது எனவே தாவா நிலத்திலுள்ள நெற்பயிர்களை அறுவடை செய்து நிகர கண்டுமுதலை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய ஆணையர் ஒருவரை நியமிக்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>2, 3, 5 எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு 1, 7 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்</u>**



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.11 17:40:44 +0530

3.1) மனுதாரரின் மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியது. மனுதாரருக்கு வழக்கு சொத்தின் மீது எந்த உரிமையும் இல்லை. 8-ம் பிரதிவாதியின் கீழ் பிரதிவாதிகள் குத்தகைதாரர்களாக சாகுபடி செய்து அனுபோகம் செய்து வருகிறார்கள் என மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ளார். கோவில் ஆவணங்கள்படி பிரதிவாதிகள் குத்தகைதாரர்களாக குறிப்பிட்டப்பட்டுள்ளது தவிர மனுதாரர் குத்தகைதாரராக குறிப்பிடப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தவறுகையின்றி தொடர்ச்சியாக குத்தகையை செலுத்தி வருகிறார்கள்.

3.2) இந்த பசலி வருடத்திற்கும் பிரதிவாதிகள் அறுவடை செய்து குத்தகை செலுத்தியுள்ளார்கள். அவ்வாறு குத்தகை செலுத்தவில்லை என்றால் வெறியேற்று நடவடிக்கைக்கு உள்ளாவார்கள். மனுதாரரின் உரிமையை வழக்கு விசாரணைமூலம் தான் நிரூபணம் செய்ய வேண்டும். கற்பனை அடிப்படையில் மனுதாரருக்கு எந்த நிவாரணமும் கிடைக்கத்தக்கதல்ல. ரிசிவர் நியமிக்க கோரி தாக்கல் செய்துள்ள மனு இ.ம.எண்.69/2024 நிலுவையில் இருக்கும்போது ஆணையர் நியமிக்க கோரும் மனு நிலைக்கதக்கதல்ல. எதிர்மனுதாரர்களுக்கு அறுவடை செய்யவும், குத்தகை 8-ம் எதிர்மனுதாரர் கோவிலுக்கு செலுத்தவும் உரிமை உள்ளது எனவே தள்ளுபடி செய்ய வேண்டும்.

4) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) **<u>தீர்வு</u>**

5.1) தாவா சொத்தானது ஸ்ரீகைலாசநாதசுவாமி திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்டது என இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அசல்



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.11 17:40:56 +0530

வழக்கானது தாவா சொத்துக்களின் சுவாதீனத்தை 1 முதல் 7 பிரதிவாதிகள் வாதியிடம் ஒப்படைக்க சுவாதீன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 10.02.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 07.01.2024 அன்று வாதி தனது உறவினர்களுடன் தாவா நிலங்களை அறுவடை செய்யும் தேதிக்குறித்து பார்த்துக்கொண்டிருந்தபோது 1 முதல் 7 பிரதிவாதிகள் தாவா சொத்தை சட்ட விரோதமாக ஆக்கிரமித்துவிட்டார்கள் என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்.

5.2) மேற்படி 07.01.2024 முதல் தாவா சொத்து 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் வசம் உள்ளது என மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ளார். வழக்குச் சொத்தில் வாதியின் உரிமை மற்றும் சுவாதீனம் நிர்ணயிக்கப்படாதபோது வழக்கு சொத்தில் விளைந்துள்ள நெற்பயிர்களை மனுதாரர்தான் சாகுபடி செய்தார் என்று தகுந்த ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாதபோது தாவா சொத்தில் விளைந்துள்ள நெற்பயிர்களை அறுவடை செய்து நிகர கண்டுமுதலை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய மனுதாரர் கோருவது ஏற்புடையதாக இல்லை.

5.3) மேலும் ரிசிவர் நியமிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நிலுவையில் உள்ளது. மேற்கண்ட சூழலில் வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொள்ளும்போது இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல என்று தீர்வு காண்கிறேன்.

6) **இறுதியாக இம்மனுவை செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறேன்.**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லசொல்ல அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம்



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.11 17:41:06 +0530

செய்யப்பட்டு இன்று (11.03.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.11 17:41:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு

இருதரப்பிலும் சாட்சி சான்றாவணங்கள் இல்லை.

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.11 17:41:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு